# ஆட்சியர்களே!
# ஆட்சியர்களே!




இரா. இளங்குமரனார்

# ஆட்சியர்களே!
# ஆட்சியர்களே!

**இரா. இளங்குமரனார்**

**திருவள்ளுவர் தவச்சாலை**
திருவளர்குடி (அல்லூர்)
திருச்சிராப்பள்ளி மாவட்டம் - 620 101
தொலைப் பேசி : 0431-2685328

# நூற்குறிப்பு


| | |
|---|---|
| நூற்பெயர் | **ஆட்சியர்களே! ஆட்சியர்களே!** |
| ஆசிரியர் | இரா. இளங்குமரனார் |
| மொழி | தமிழ் |
| பொருள் | வாழ்வியல் |
| முதற் பதிப்பு | ஏப்பிரல் 2014 |
| பக்கம் | 28 |
| எழுத்து | 13 |
| தாள் | 13.7 வெள்ளை மேப்லித்தோ |
| அளவு | தெம்மி (1/8) |
| படிகள் | 1000 |
| விலை | உருபா : 20 |
| உரிமை | ஆசிரியர்க்கு |
| வெளியீடு | திருவள்ளுவர் தவச்சாலை<br>அல்லூர் - 620 101,<br>திருச்சிராப்பள்ளி மாவட்டம். |
| நூலாக்கம் | "தி பிரிண்டிங்கு அவுசு"<br>திருச்சிராப்பள்ளி - 23 |

நூல் கிடைக்குமிடம்:

♦ **திருவள்ளுவர் தவச்சாலை**
அல்லூர் 620 101, திருச்சிராப்பள்ளி மாவட்டம்,
தொலைப்பேசி எண் : 0431 - 2685328

# நாட்டு நல வித்து

நாட்டு நலம் கருதி அமைக்கப்பட்டதே அரசியல் அமைப்பு, அவ்வமைப்புக்கு உட்பட்டுக் கடனாற்ற வேண்டியவரே அரசியலாளர். அரசியலாளர் நாட்டுமக்களுக்கு எடுத்துக் காட்டான வாழ்வுடையவராக இருத்தல் வேண்டும். அவர்களிடம் அத்தன்மை அமையாக்கால் நாட்டு மக்களிடம் அமைதலை எதிர்பார்த்தல் அரிது.

சட்டம் பற்றிக் கவலைப்படாமல் தம் சால்பு கருதி வாழும் சான்றோர் கொண்ட செவ்விய வாழ்வும், சால்பிலா அரசியலாலும் அவர்கள் வழிப் பட்ட கட்சி எடுபிடிகளாலும் பெருந்துயர்க்கு ஆட்படவே செய்யும். சால்புடைய வேந்தன் ஒருவன், "ஊர்தியை இயக்கும் ஒருவன் செவ்வியன் என்றால் வழிச் செலவும் சீராக அமையும்; அவன் ஊர்தியைச் செவ்விதிற் செலுத்தும் திறவோன் அல்லன் ஆயின் கேடுமிக்க சேற்றுட்பட்டுப் பலப்பல துயர்களை ஆக்கும்" என்றான் (புறம் – 185 : தொண்டைமான் இளந்திரையன்). அவன் காலம் முடிமன்னர் காலம்! ஆக்கமும் கேடும் அவன் செயற்பாட்டில் உள்ளது. மக்களாட்சியின் நிலையோ பலப்பலர் தலைமையது. அனைவர்க்கும் பொதுமையது அரசமைப்புச் சட்டம்! அதனைப் போற்றல் கட்டாயமாகும். அதன் செம்மை சீர்மை ஆகியவை சட்டமன்றம், நாடாளுமன்றம், அறமன்றம் ஆயவை சார்ந்தவை.

துறையறிவுத் தேர்ச்சி இல்லார் எத்துறை இயக்கத்திற்கும் உரியவரெனக் கொள்ளப்படார். ஆனால் நாடாள்பவர்க்கு எத்தகுதியாவது வரம்பாகக் கொள்ளப்படுகிறதா? சோழர் காலக் குடவோலைத் தகுதி மக்களாட்சித் தகுதிக்குரியது என்றால், இந்நாளில் தேர்தலுக்கு நிற்கத் தக்காராக எவரொருவர் இருப்பார்?

பொறுக்கு மணியை எடுத்துப் பூச்சிக்கேடு, விளைவுக்குறை அகற்றிய வித்தே, நாற்றங்காலில் பாவுதல் வேளாண்வழக்கு. அதன் வளர்ச்சி நலம் கண்டே நடவு நிலத்தில் அது ஊன்றப்படும்! வித்து செம்மை, வளர்ப்புச் செம்மை காவல் செம்மை என்பவை கொண்டே விளைவுச் செம்மை அமையும். ஆதலால் தேர்தல் செம்மையே ஆட்சி அடிப்படைச் செம்மை என்றால், தேர்தலில் கொள்ளப்படும் கரவு, ஊழல், வன்முறை, வெறி என்பவை ஆட்சி அரியணையில் ஏறும் போது எப்படி இருக்கும்! மதுக்குடி, இலவயம், கையூட்டு, காட்சிப்படம், கட்சிவெறி, சாதி சமய வெறிகள் என்பவற்றால் சிந்தனையையும்

உழைப்பையும் பண்பாட்டையும் கெடுப்பவர்கள் ஆட்சிக்கு வந்தால் ஆட்சி எப்படி இருக்கும்?

நாட்டு நிலை, வீட்டுநிலை சார்ந்தது, வீடு வீடாக இல்லை! கற்றவர், தலைமையர் தக்கோராக இல்லை! தேர்தல் நடத்தவே கெடுபிடிகள் மிகப்பல எனின் தேர்ந்தெடுக்கப்பட்டவர் நாற்காலி கிடைத்ததும், காட்டு நாற்காலி யாகத்தானே இருப்பர்!

தேர்தலுக்கு முத்திங்களுக்கு முன்னரே மாநில மைய அரசுகளைக் கலைத்து நாட்டுத் தலைவராட்சியாக்கல், சட்டமன்ற, நாடாளுமன்றத் தேர்தல்களை ஒன்றாக நடத்தல், இந்தியத்தை ஒன்றியமாக்கி அவ்வம் மாநிலப் பொறுப்பை அவ்வம் மாநிலத் தரசிடம் ஒப்படைத்து வேண்டிய அளவு பொதுமைக் கூட்டமைப்புக் கொள்ளல், தகுதியில்லாரை ஆட்சிக் கட்டிலில் இருந்து விலக்குதல் உரிமை என்பவை போற்றப்படின், நல்லாட்சி எய்தக் களப்பணிபோல் அமையும்! இச்சிந்தனைகளில் கிளர்ந்த சுவடி 'ஆட்சியர்களே! ஆட்சியர்களே!' என்னும் சுவடி!

இதனைத் தம் தலைக்கடனாக ஏற்று மெய்ப்புப்பார்த்தும் வேண்டுவ செய்தும் உதவும் பெருந்தகை முனைவர் பி. தமிழகனார்க்கும், திருச்சிராப்பள்ளி அச்சுக் குழுமத்திற்கும் நன்றி பெரிதுடையேன்!

வாழிய நலனே! வாழிய நிலனே!

இன்ப அன்புடன்
**இரா. இளங்குமரன்**

## ஆட்சியர்களே! ஆட்சியர்களே!

நீங்கள் இறைமாட்சி உணர்ந்த ஆட்சியராக இருக்க என்றாவது எண்ணிய துண்டா?

அரசு என்பது என்ன? எதற்காக அரசு?

ஆளும் நாட்டின் மண்ணை, மண்ணின் மக்களை, மண்ணின் மொழியைக் காப்பது தானே அரசு!

நெஞ்சிலே கைவைத்துச் சொல்லுங்கள், நாங்கள் செய்வது இறையாட்சியாம் ஆட்சிதான் என்று!

நெஞ்சமென ஒன்று இருந்தால் தானே கைவைத்துச் சொல்வீர்கள்!

ஆட்சிக் கட்டில் ஏறும் போதே அதனைக் கழற்றி வைத்து விட்டுத்தானே அமர்ந்தீர்கள்?

நீங்கள் மண்ணைக் காத்தீர்களா? காத்திருந்தால் மண்ணை இழப்பீர்களா? மண்ணிழப்பு எனப் போரிட்டு எழுந்தவர்களை அடக்கி ஒடுக்கிப் பகையாக்கிக் கொடுமை புரிந்திருப்பீர்களா? சுருட்டும் அளவும் அண்டையான் சுருட்ட, தமிழ் மண்ணின் நலத்தைச் சுருட்டிக் கொண்டுதானே நீங்கள் இருந்தீர்கள்! வேங்கடம், சித்தூர், பழையூர், மூணாறு, பீர்மேடு, இடுக்கி, நாஞ்சில், கச்சத்தீவு என அண்டையார், கடலூழிக் கொள்ளையினும் கொள்ளையராய்ச் சுருட்ட, இந்தியத்திற்குக் கால் கழுவும் அடிமையராய்க் கிடந்திருப்பீர்களா? ஆந்திரம் பிரிந்தும், கருநாடகம் பிரிந்தும், கேரளம் பிரிந்தும் தேசியத் தந்தை காந்தியார் ‘தமிழ்நாடு, எனச் சூட்டிய பெயரை – கட்சிக்குச் சூட்டிய பெயரை – நீங்கள் நாட்டுக்குச் சூட்டினீர்கள்! ஈகியார் தம்மைக் காவாகக் கொண்ட பின்னராவது தமிழ்நாடு என்னும் பெயர் தந்தீர்களா?

நீங்கள் தாமா தமிழ்நாட்டுப் பல்கலைக்கழகம், தமிழ்நாட்டு முறை மன்றம் என்று பெயர் சூட்டுவீர்கள்?

அண்ணா பெயர் சூட்டினார்! ஐந்தாண்டுகளில் ஆட்சிமொழி முதல் அனைத்தும் தமிழாகும் என்றார். அவர் இதயத்தை வாங்கிக் கொண்டு ஆட்சிக் கட்டில் ஏறியவர் ‘எங்கும் தமிழ் எதிலும் தமிழ்’ என முழுங்கினார்!

பல்லாண்டுகள் ஆட்சிக் கட்டிலில் இருந்தார்! ஏறத்தாழ எங்கேயும் தமிழில்லை! எதிலேயும் தமிழில்லை எனத் திட்டமிட்டு ஆக்கினார்!

மேடைப் பேச்சில் தமிழை எடுத்து வீசியவர்கள் தமிழை எந்நிலையிலும் மேடேற விடாமல் ஒடுக்கினர்.

அவருக்குப் பின்னே வந்தவர் தமிழ்ப் பல்கலைக் கழகம், ஐந்தாம் தமிழ்ச் சங்கம் எனக் கூறி ஒன்றை உருவாக்கினார்! அதற்கும் அன்றன்று வாழ வகை செய்ததை அன்றி, நிலைவைப்புச் செய்தார் அல்லர்! அவர் பெயர் சொல்லி ஆட்சிக்கு வந்தவரோ, நிலைவைப்பும் வைத்திலர்! நிலைவைப்பாய் இருந்த நிலத்தையும் கட்சி அரசியல் வழக்கம் போல் அத்துறைக்கு இத்துறைக்கு என நிலச் சுரண்டல் ஆக்கிக் கொண்டுள்ளார்!

'எங்கும் தமிழ் எதிலும் தமிழ்' என்று சொல்லி, விட்டுவைத்தவர், கை வை!யாது விட்டுக் கேடு மட்டும் செய்த அரசுப் பள்ளிகளில், ஏதோ தமிழாசிரியர் இருந்தும் இல்லாமலும் இருந்ததையும் முற்றாக ஒழிக்கத் திட்டமிட்டு, ஆங்கிலவழிப் பள்ளிகளாக மாற்றித் தொடர்கிறார் இற்றை முதல்வர்!

தாங்கள் ஆளும் நாடு தமிழ்நாடு என்னும் எண்ணம் தானும் இல்லாமல், கெடுப்பார் ஆட்சியில் தமிழுக்கு என்ன ஆக்கம் கொடுப்பார்?

முன்னவர் 'எங்கும் தமிழ் எதிலும் தமிழ்' என்றார்! இவர் அதைச் சொல்லும் பழி இல்லாமல், தமிழ்ப் போராட்டம் எத்தனை எத்தனை நடந்தாலும் கேட்பதோ, மறுமொழி சொல்வதோ இல்லாமல், இதனைக் காதில் வாங்கிக் கொண்டாலும், மறுமொழி சொன்னாலும் தம் தகுதிக்கு இழப்பு என எண்ணி, கேடு கெட்ட - மானம் கெட்ட - ஒன்றுபடுதல் அறவே இல்லாத - இத்தமிழ்ப் பிறவியர்க்கு - நான் என்ன சொல்வது? சொல்லிக் கொண்டே கிடக்கட்டும்! நம் ஆட்சி மட்டும் நடக்கட்டும்! மீள எவரும் எட்டிப்பார்க்க இயலாமல் நம்மைக் கட்டிப் பிடித்து காலில் நெடுஞ்சாண் கிடையாய்க் கிடக்கும் மூடத் தமிழர் இருக்கும் வரை, தமிழர் மூண்டெரி நெருப்பாய்க் கிளர்ந்தாலும், இவர்கள் விட்டுக் கொடுக்க மாட்டார் என்னும் துணிவால் மதுக்கொடுப்புவழி இலவசக் கொடுப்பிலே மிதக்கிறார்!

ஆளும் கட்சியரை விட்டு அயற்கட்சியரை எண்ணினால், 'ஐயோ கொடுமை' என்பதை அன்றி என்ன சொல்வது?

ஐஐஐ

## சாதிக்கட்சியரே! சாதிக்கட்சியரே!

சற்றே கேளுங்கள்! சாதி என்று தொடங்கினீர்! சாதிக் கட்சி என்றீர்! சாதி அரசியல் நடத்துகிறீர்!

நீவிர் தலையெடுக்குமுன் இவ்வளவு சாதிமோதல் தமிழகத்தில் ஏற்பட்டது உண்டா?

ஏற்படுத்தி வெறியராக்கி வெட்டு குத்துகளுக்கு எடுத்துவிட்டது நீங்கள் தாமே!

அவரவர் வேலை! அவரவர் கடமை என வாழ்ந்தவரை மோதும் பகைக்கு மூட்டிவிட்டவர் – விட்டுக் கொண்டு இருப்பவர் எவர்?

ஒரு சாதிக்குள் எத்தனை பிரிவு? எத்தனை தலைவர்? ஒரு சாதிக்குள் ஆக்கச் செயல் செய்ய நீர் எடுத்த நடவடிக்கை என்ன?

பிற்படுத்தப்பட்டோருள் எத்தனை பிரிவு?
தாழ்த்தப்பட்டோருள் எத்தனை பிரிவு?

பிற்படுத்தப்பட்டோருள்ளும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் – தாழ்த்தப்பட்டோருள்ளும் தீண்டாத் தாழ்த்தப்பட்டோர் – என எத்தனை பிரிவு? சாதி, மாந்தர்க்கு உண்டா?

மீனின் சாதி, பறவைச் சாதி, விலங்கின் சாதி என மற்றை உயிரிப் பிரிவுகளுக்குத் தானே இருந்தன! மாந்தருக்குள் குடி உண்டு; குலம் உண்டு; இனம் உண்டு. ஒன்றன் விரிவு ஒன்று.

ஒரு குடும்பத்தார் ஒரு குடி; பலகுடியர் ஒருகுலம்; பலகுலத்தார் ஓர் இனம்!

"குலமும் ஒன்றே! குடியும் ஒன்றே! இனமும் ஒன்றே" அவரவர் பழக்கத்திற்குத் தகப் பழகிய தொழில் செய்தனர். ஆனால் தொழில் பிரிவு உயர்வு தாழ்வு கொண்டது அன்று. உழவர்க்குக் கொல்லர், தச்சர் இல்லாமல் முடியுமா? கலம் வனைபவர், துணி நெய்பவர் இல்லாமல் முடியுமா? கலை என்றால், பாணர், கூத்தர், சிற்பர், ஓவர் எனத் தோன்ற மாட்டாரா?

வணிகம் என்றால் விற்பவர் வாங்குபவர் இருக்கத்தானே செய்வர்?
துணி தைப்பவர், தோல் தைப்பவர் என்பார் வேண்டும் தானே!

இவர்கள் தொட்டுக் கொள்ள - கண்டு கொள்ள - கூடாதவர்களா? ஊர் காவல் நாடுகாவல் எனப் படைஞர் இல்லாத ஊரும் நாடும் உண்டா? இவர்களைச் சாதிமைப் படுத்திய கீழ்மை, 'ஆண்சாதி பெண்சாதி' என்ற அளவுக்குப் போய்விட்டதே!

அவரவர் சாதி என்றால் உடனே செய்ய வேண்டுவ தென்ன? அவர்களை நாகரிகர்களாக - பண்பட்டவர்களாக - உயரிய உழைப்பர்களாக - குடியாதவர்களாக - சூதாடாதவர்களாக - வாழக் கற்பிக்க அல்லவோ வேண்டும்!

எதிர்பாரா விளைவுக்கு ஆட்பட்டவனுக்கு முதலுதவி செய்வது போல் அதனை அல்லவோ செய்ய வேண்டும்!

ஒரு பிரிவோடு ஒரு பிரிவு முட்டாமல் மோதாமல் வாழ அல்லவோ வழிகாட்ட வேண்டும்!

ஆங்கிலேயன் இங்கே வருகிறான்; இந்தியாவைப் பற்றுகிறான்; ஆள்கிறான்! இயற்கை உந்துதலால் இந்தியப் பெண்ணைத் தொடர்பு கொண்டு மணம் புரிகிறான். மக்களைப் பெறுகிறான்! 'ஆங்கிலோ இந்தியர்' எனப் பிரிவு உருவாகிவிடுகின்றது. ஏன்? மாந்தப் பிறப்பு அனைத்தும் ஒப்பானவை என்பதன் சான்று அல்லவோ!

வேடந்தாங்கலுக்கு எத்தனை நாட்டுப்பறவைகள் வருகின்றன? கொக்கு, நாரை, என எத்தனை வகை வந்தாலும் இனத்தோடு சேர்ந்துதானே முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கின்றன! அவ்வளவு போவானேன், பசுவும் எருமையும் சேர்ந்து கன்று போடுகின்றனவா? செம்மறியாடும் வெள்ளையாடும் சேர்ந்து குட்டி போடுகின்றனவா? இல்லையே ஏன்? அவை வெவ்வேறு இனங்கள்!

இந்த அற்ப அறிவுமா ஆறறிவுப் பிறப்புக்கு - ஆறறிவுப் பிறப்புத் தலைமைக்கு வரக் கூடாது! நீங்கள் பிழைக்க எத்தனையோ எத்தனையோ வழிகள் உண்டு! சாதியை - சாதி வெறியைத் - தூண்டி நாட்டைக் கெடுக்காமல் இருந்தால் உங்களுக்குக் கோடி வணக்கம்! சாதியை மோதவிட்டுப் பிழைக்கும் பிழைப்பு ஒரு நாளும் வீட்டுக்கும் நாட்டுக்கும் ஏன், உங்களுக்கும் நலம் செய்யப் போவதில்லை.

## மதத் தலைவர்களே! மதத் தலைவர்களே!

மதம் எதற்குப் பிடிக்கும்? நீங்கள் அப்பிறப்பா? சமயம் என்பது பக்குவப்பட்டது, பக்குவப் படுத்துவது, மதம் என்பது வெறியேற்றுவது, முட்டுவது மோதுவது! இலக்கியத்தில் மதம் உண்டு. அது கொள்கையின் பெயர். "எழுவகை மதமே உடன்படல் மறுத்தல்" எனவரும். அது வெறியன்று; ஆய்வு நெறி.

அப்படி ஏற்பட்டது தான் சமண மதம், பௌத்த மதம் என்பன. நாவல் கிளைநட்டு, வாதமிட்டு நடத்தும் கொள்கை விளக்கப் போர் அது!

அதுவும் ஆக்கம் அன்று! மனோன்மணியம் சுந்தரனார் சொல்வது போல்,

"அவ்வவர் மதமே சாலும்" எனலாம்.

"ஒன்றது பேரூர் வழி அதற் காறுள" என்னும் திருமூலரைக் கருதலாம்.

உலகியக்கும் ஒரு பேராற்றல் உண்டு. அது எங்கும் இருப்பது; எல்லா வற்றுக்கும் மூல முதலானது என்று உறுதியாக எவர் நினைப்பாரோ அவர்க்கு மதவெறி இராது. சமயச் சால்பு தோன்றும்!

"எவ்வழியும் அவரவர்க்குச் செவ்வழியே"

அவ்வழி இல்லவே இல்லை என்றாலும், நமக்கென்ன? நாம் உறுதியாக நம்பும் உலகியக்கப் பேராற்றல் அதனைப் பார்த்துக் கொள்ளும்.

ஆயன் ஆட்டு மந்தையும் மாட்டு மந்தையும் சேர்ப்பதுபோல் சேர்க்க வேண்டும் கூட்டம் என்றில்லாமல், எல்லாரும் இன்புற்றிருக்க எண்ணும் சால்பே பகுத்தறிவுப் பயனாம்.

இல்லை எனவும் வேண்டா; உண்டு எனவும் வேண்டா! அவரவர் எண்ணம் - அவரவர் வழி எனவே மாந்த நேயம்! இல்லையேல் அரசியல் கட்சிக்கு ஆள்சேர்க்கும் வேலை தான் மத - சமய - வேலையுமாம்!

'உனக்கு உதவ வேண்டுமானால் என் சமயத்திற்கு வா' என்கிறாயா? நீ சமயக் கேடன்! சமயச் சால்பைக் கெடுப்பவன். நீ உன் போக்கில் போ! அவன் போக்கில் போவான். நீ தக்கவன் - நீ சொல்வது தக்கது என அவனுக்குத் தோன்றினால் அவனே உன்னிடம் வருவான். இளக்கம் கண்டு இறக்கம் காட்டி வேட்டையாடுதல் - கண்ணி போடுதல் வேண்டா!

ஒரே மதத்தார், ஒரே சமயத்தார் தங்களுக்குள் வேறுபாடு இல்லாமல் - சண்டையிடாமல் - வழக்காடாமல் - பிரிவு கொள்ளாமல் வாழவா செய்கின்றனர்?

வீடுகள் என்ன, நாட்டுக்கு நாடு பார்த்தாலே புரியுமே! எவ்வளவு பெரியவர்கள் தோற்றுவித்திருந்தாலும், எவ்வளவு பெரிய கூட்டம் பரப்பிப் பெருக்கியிருந்தாலும், மதம், சமயம், மார்க்கம், நெறி என்னும் பெயர்களால் பகுத்திருந்தால் அவை மக்களை ஒப்பக் கருதுவன அல்ல.

மாறுபட்ட மதம் சமயம் எனப் பாராமல் மார்க்கம் எனப் பாராமல் அனைத்து மாந்தரையும் ஒப்பாகப் பார்க்கும் பார்வையே அவர்கள் துயரம் நீக்க அயர்வு அகற்றி வாழும் வகைக்கு வழிகாட்டலே மாந்த நேயமாகும்.

என் கட்சியே கட்சி, என் கட்சி தவிரப் பிற கட்சிகள் கூட்டும் தொடர்பும் கூடாது; என் கட்சி சாராதோர் எம்பகை என்று பார்க்கும் கட்சி வெறியர்க்கும் மதவெறியர்க்கும் எந்த வேறுபாடும் இல்லை.

ஒத்தது போற்றி மாந்த நேயம் கொண்டு, ஆன்ம நேயமாக வளர்ந்து எல்லா உயிரும் இன்புற்றிருக்க எண்ணும் எண்ணம் உடையவரே மாந்தர்க்குரிய ஆறாம் அறிவும் அதன் மேலாம் நிலைகளும் உடையவர் ஆவர்!

சமயச் சால்புடையார் அவரவர் சமயத்தில் பற்றுமை கொண்டிருப்பார். மற்றைச் சமயத்தாரும் அவரவர் சமயப் பற்றினராய் இருப்பதை மதிப்பார். தம் சமயம் அயற்சமயம் என நோக்கி உதவக் கைநீட்டார்; உதவாமல் ஒதுக்கார்.

துன்பமும் இன்பமும் உயிர்ப் பொதுமைய.

உரிமையும் அவ்வாறே உயிர்ப் பொதுமையது.

அப்பொதுமை போற்றுவாரே ஓரிறைக் கொள்கையார். இல்லையேல் இறைமையைக் கூறுபோட்டு அதன் பெயரால் மக்களையும் கூறு போட்டுப் பார்ப்பவர்.

கண்ணில் காட்டலாகாப் பொருள் இறைமை! கருத்தால் உணரக் கூடும் பொருள் அது. அதனை ஒப்பப் போற்றுதல் உயிர் நேயம் உடையவர் பிறவிக்கடன்.

மதங்கள், சமயங்கள், மார்க்கங்கள் எனத் தோன்றாப் பழங்காலம் பெருமை மிக்கது. அந்நிலையில் வாழவே சமயச் சான்றோர் வழி காட்டினர். ஆனால், அருவிநீர் அகப்பட்ட கழிவுகளை யெல்லாம் திரட்டியது போல் மாந்தர் சிறுமைத்தனத்தைச் சமய மதங்களில் ஏற்றிக் கடவுள் பெயரால் செய்யக் கூடாக் கேடுகள் செய்கின்றனர் என்பது உண்மை விளக்கமாம்.

ஃஃஃ

# உழைப்பவர்களே! உழைப்பவர்களே!

உங்கள் கை உயர் கை! உயிர் வழங்கும் கை! அதனால் முன்னவர்களால் உழைப்பவர் கை திருக்கை எனப்பட்டது. திருக்கை என இருவர் கைகள் பாராட்டப்பட்டன. ஒருவர் கை உழைப்பவர் கை; மற்றொருவர் கை எழுதுபவர் கை. முன்னவர் கை உணவு தந்து உயிர் வளர்ப்பது. பின்னவர் கை உணர்வு தந்து அறிவு வளர்ப்பது. முன்னதற்குச் சான்று வள்ளுவத்தின் உழவும் கம்பரின் ஏர் எழுபதும் திருக்கை வழக்கம் என்பனவுமாம்.

பின்னதற்குச் சான்று கோயிலுள் ஒரு பகுதி திருக்கைக் கோட்டி என வழங்கப்பட்டதாம். அங்கு ஏடு எழுதுதல், பாதுகாத்தல், பாடம் சொல்லல் நூலாய்தல் என்பன நிகழ்ந்தனவாம்.

உழைப்பவர் கை, எழுங்கை; தொழுங்கை, விழுங்கைகளை வீழாமல் தூக்கி வலுவும் வாய்ப்பும் உண்டாக்கும் கையாம். உழைப்பவர் என்பதன் கூட்டுப் பெயர் உழவர் - உழவு - என்பன. மேழிச் செல்வர் என்பாரும் அவர்.

உழைப்பவராம் உழவர் கை, இரக்காது. இரப்பவர்க்கு இயன்றதை உதவுமே அல்லாமல் ஈதலை மறக்காது.

இரந்துண்ண வருவார்க்கு கரந்து கதவு மூடா அடையா நெடுங்கதவு, அவர்கள் வீட்டுக் கதவு.

பெருவளம் இல்லை எனினும் பகுத்துண்டு பசியாற்றும் பரிவுக் கை உழைப்பவர் கை.

உழைப்பவர் கை எவர் கைக்கும் மேம்பட்டதை அன்றிக் கீழே தாழ்ந்து ஈபவர் உண்டா என ஏங்காத கை.

உழைக்கப் பிறந்த நான் என் காலால் நிற்பேன்; என் கையால் தேடுவேன்; எந்த இரப்பும் இலவயமும் கேட்டு உழைப்பாற்றலைத் துருப்பிடித்த இரும்பாக்க மாட்டேன் என்னும் கொள்கைக் கை அது கொள்ளைக் கை யன்று; திருடிப் பிழைக்கும் தீமைக் கையும் அன்று.

அதனால் "கள்வார் இல்லை காப்பாரும் இல்லை" எனவும்,

"களமலி குப்பை காப்பில வைகவும்" என்றும் நிறை வாழ்வு கொண்டது அது.

விடுதலை மாந்தப் பிறப்பின் உரிமை; அடிமை வாழ்வு என்பது குடிமைக் கேடு. சுரண்டல்காரர்க்கு இடம் தருவதே உரிமை இழப்பு. உழைப்பவர்க்கு உள்ளம் உடைமையே உடைமை. உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளலே கொள்கை. ஆள்வோர் ஆளுகைச் சட்டம் வேண்டாப் பிறவியர் உழைப்புப் பிறவியர். அவர் உருவாக்கி வைத்ததே ஆட்சி, ஆளுகை என்பவை.

உழைப்பவர் கைம் மடங்கினால் எவரும் வாழார்! எவரும் கதிர் நோக்கி வாழும் கதிர் நோக்கிச் செடிபோல் அவரை நோக்கி வாழ்வர். ஆனால் இற்றைத் தொடர்நிலை என்ன ஆனது? அயலரசு போயது குடியரசு வந்தது. கூடவே வந்தது குடிகேடு!

குடிப்பவர் பண்டும் இருந்தனர். அவர்கள் இயற்கைப் பழச்சாறு, நெல், கரும்பு கொண்டு புளிங்காடி ஆக்கிக் களிப்புறுதற்காகப் பயன்படுத்தினர். அதனையும் கள்ளுண்ணாமை காட்டி வலியுறுத்தினர் மக்கள் நலம் காக்க விரும்பிய மாண்பினர்.

மன்னரும் பருகினார்; சங்கச் சான்றோரும் பருகினர்; மட்டாக உண்ணத் தக்கது ஆதலால் அதற்கு மட்டு என்று பெயரிட்டனர். மதமதப்பு ஏற்றலால் மது என்றனர். அறிவை மயக்கலால் கள் என்றனர். அவை குடிகேடாக அமையவில்லை, விருந்து மகிழ்வு என்னும் அளவிலே இருந்தது. ஆயினும் கேடே என்று சால்பாளர் தடுக்கவே செய்தனர்.

இக்காலத்தில் வேதிமமாக்கும் மதுவகை எண்ணற்றன. உழைத்த காசை எல்லாம் உறிஞ்சித் தொலைக்க வந்தது.

உண்டவர் குடலை அரித்தது; உடலை எரித்தது; குடும்பத்தைப் பாழாக்கியது! அதனை ஒழித்தே ஆகச் சான்றோர் கிளர்ந்தனர்; அவ்வப்பகுதிச் சான்றோரும் முனைப்புக் காட்டி மதுவொழிப்புக் கொள்கையை நாட்டுக்கு நல்கினர்.

ஆட்சியைப் பிடித்தவர்கள், அப்பெரியவர்களின் கொள்கைகளை ஆழக் குழி தோண்டிப் புதைத்து, குடிகெடுக்கும் அரசாகக் குடி கொடுத்துக் கொள்ளையடித்து, அக் கொள்ளையின் ஒரு பகுதியை இலவய அரிசி, உணவு முதலியனவாக, பொழுதைக் கேடாக்கும் தொலைக் காட்சியாக், கொடைவள்ளல் வேடமிட்டு மீண்டும் கொள்ளையடிக்கும் கோலோச்சுரிமையாகக் கொண்டனர். உழைப்பவர்க்கு அவையே

உழைப்பைக் கெடுக்கப் போதுமாகவும், வேலை செய்யாமல் கூலித் திட்டம் என்னும் பெருங்கேட்டுத் திட்டமும் கொண்டு உழைப்பைக் குட்டிச் சுவராக்கி விட்டது. உழைக்கும் வேலைக்கு அயலகத்தார்க்குக் கதவைத் திறந்து விட்டு அவ்வகையாலும் கெடுப்பதாயிற்று!

இலவசம் வேண்டா! அரசு கல்வி தருவது கட்டாயம்; மருத்துவம் தருவதும் கட்டாயம்; வேலை தருவதோ மிகக் கட்டாயம்; மற்றை இலவசம் வேண்டா என்னும் மான உணர்வு உண்டாகி, மற்றை இலவசங்களைத் தூக்கி எறியும் துணிவு வந்தாக வேண்டும். அவ்வாறு வாராதிருக்கச் செய்வனவே தொலைக்காட்சி இலவசமும் குடி கொடுப்பும் என அறிவாளர் தெளிவிக்கும் மீட்பராக விளங்க வேண்டும். காலக் கட்டாயம் இது.

## வேதியரே! வேதியரே! வாழிய நீவிர்!

வேதியரே, நீர் மெய்யாகவே வேதியரா? தமிழப் போலி வேதியரா? வேதம் கற்றவரா? வேண்டும் நாமாவளி மட்டும் கற்றவரா? அதையும் வடமொழியில் கற்றவரா? தமிழில் எழுதிப் பழகி ஓதுபவரா? பூணூல் பிறக்கும் போதே உம்மோடு இருந்ததா? பின்னே வேதிய அடையாளமாகப் போட்டுக் கொண்டதா? வேதியர்க்குச், சிவனிய, மாலிய, முருகிய முதலிய வழிபாட்டு முறை உண்டா? எந்த வேதத்தில் இவ்வழிபாடுகள் உண்டு எனச் சொல்வீரா?

எந்த வேதத்திலாவது தமிழில் ஓதக் கூடாது என ஓதியுள்ளதா? 'சித்தாந்தம்' கோலோச்சிய இடத்தில் வேதாந்தம் புகுந்தது. எதுவோ கட்டியதில் எதுவோ குடியிருப்பது போல் தோன்றவில்லையா? 'வேதியம்' புரட்டு உருட்டு வகையால் புகுமுன் கோயிலுள், திருப்பதிகம் விண்ணப்பம் செய்யும் நிலையில் இருந்த கோயிலைச் சூழ்ச்சியால் பற்றிக் கொண்டது, வந்தவள் வாழ்த்தாள் இருந்தவள் கெட்டாள் என்பது போல் தோன்றவில்லையா?

கிறித்தவன் அவன் வழிபடுமிடத்திற்கு விவிலியத்தோடு போகிறானே! இசுலாமியன் அவன் வழிபடுமிடத்திற்குத் திருக்குரானோடு புகுகிறானே! சீக்கியன் கிரந்த சாகிபைத் தானே வழிபடு பொருளாகக் கொண்டுள்ளான்?

வேதியத்திற்கு மட்டும், தேங்காய், பழம், சூடம், 'பத்தி', தட்டில் பணம் ஏற்பட்டது ஏன்?

ஏன், தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்புகழ், நாலாயிரப் பிரபந்தம், பின்னை இசைப் பாடல்கள், கீர்த்தனங்கள் இல்லாமலா போய் விட்டன?

அந்தத் திருக்கோயிலுக்குச் சென்று அவ்வவ் விறைவனைப் பாடிய ஞானசம்பந்தர், நாவுக்கரசர், சுந்தரர், மணிவாசகர், கருவூரர், அருணகிரியார், வள்ளலார் ஆகியோரினும் அவர்கள் திருப்பாடல்களினும் உம் வேதமும் நீவிரும் எவ்வகையில் மேம்பட்டீர்?

நெஞ்சறிந்த வஞ்சகமல்லவா உம் செயல்?

திருக்கோயில் என்ன சூழ்ச்சிக்கு இருப்பிடமா?

தெய்வக்குற்றம் என்பது உம்மைத் தீண்டாதா?

தெய்வப் பிறப்பென மடவர்களை ஏமாற்றுவது போல் தெய்வ மொழி யென மூடர்களை மயக்குவது போல், தெய்வத்தையும் ஏமாற்றி மயக்கும் செயலல்லவா உம் செயல்?

நீரே தேவாரம் திருவாசகம் ஓதினால் நீர் தீட்டுப்பட்டு விடுவீரா? இல்லை தேவார, திருவாசகம் முதலியவை தீட்டுப்பட்டுப் போகுமா? வேதியராகிய நீவிர் உம் வீட்டுச் சடங்குகளை உம் மொழியில் நடத்துவது சரி; நீவிர் வாழும் நாடு மொழி இனம் ஆயவற்றுக்கு நன்றிக் கடனாக உம் குடும்பச் சடங்குகளை மண்ணின் மொழியாகிய தமிழில் செய்யும்! கேட்கவும் இல்லை! எம் மொழியினர் திருமணம், புதுமனை முதலியவற்றையும் உம் மொழியில் தான் நடத்துவோம் என்பது அடாவடித்தனம் இல்லையா?

தமிழர்கள் அறிவறியா மூடமாக - எதையும் விளங்காமல் கேட்பதே எங்கும் வழக்கமாகிப் போகி விட்டதால் - நீவிரும் விளங்கக் கூடாது என்று ஓதுவதால் நீவிராவது விளங்குவீரா? தெய்வச் சான்றாக விளங்குவீரா?

எங்கிருந்தோ வந்தவன் ஆங்கிலேயன்! அவன் எல்லாச் சடங்குகளையும் அவ்வம் மண்ணின் மைந்தர் மொழியில் செய்யும் வழியைக் கடைப்பிடித்ததால் தானே தன் சமயத்தைப் பரப்பினான்! தமிழன் கிறித்தவனாகவும், இசுலாமியனாகவும் இந்நாளில் (ஈழத்தில்) இழிநிலைச் செயலில் தலைப்பட்டுள்ள பௌத்தனாகவும் ஆகச் செய்ததில் உம்பங்கு பெரிது இல்லையா?

கோயிலுக்குள் - தெய்வ வழிபாட்டு முறைக்குள் - புதைக்கும் புதை காட்டுள் கூட சாதிமையை - தீண்டாமையை - உருவாக்கி நீவிர் விட, அறிவறிந்த தமிழரும், தமிழர் சமய மடங்களின் தலைவர்களாம் சாதி வெறிமையரும் வட மொழிக் காவலராய் - மண்ணின் மொழிக்குக் கேடு சூழ்பவராய் ஆகியமை ஒண்ட வந்த பிடாரி ஊர்ப் பிடாரியை வளைத்தது போன்றது அல்லவா!

மடத்துத் தலைவருள் சிலரே மடம் என்பதன் பொருளுணர்ந்து செயல்படுகின்றனர். ஏனையோர் பாவேந்தர் கூறியபடி மடத் தலைவர்களாகத் தானே உள்ளனர்! எல்லாம் பல்யாக சாலை முது குடுமி தொட்ட பெரு நோய் அல்லவா! விழிப்புற்ற தமிழர் தலையெடுத்து வரும் காலத்திலேயாவது மனமறிந்த தெய்வப்பழி தேடாதீர்!

பழியிலா வேதியர் கிளர்ந்தால் அவர் அடி எம்முடிமேல் என வரகுணன் சொல்லிய கல்வெட்டைக் கொள்ளத் தவறோம் நாம்.

ஃஃஃ

## முறைமன்ற நடுவர்களே! முறைமன்ற நடுவர்களே!

அவலப்பட்டார், அல்லற்பட்டார், எல்லாமும் இழந்து பட்டார் உம்மிடம் அவர் தாய் மொழியாம் வாய்மொழியால் கூறக் கேட்டால் உம் செவி பொறுக்காதா? வெந்து போகுமா?

அவரவர் அவலத்தை 'அம்மா அப்பா' என்று தானே தொடங்கத் தானே தமிழ்வாய்க்கு முடியும். அதனைக் கேட்டால் தானே உண்மை நிலை புரியும். அவருக்காக ஒருவர் சட்டம் பேசினாலும், அவர் புரியும் மொழியில் இருந்தால் தானே இன்ன சொல்கிறார் எனப் பாதிக்கப்பட்டவர் உணர முடியும்?

பாதிக்கப்பட்டவர் பதிக்க மாட்டா மொழியில் நீங்கள் பேசிக் கொண்டால் அவர் வழக்கா, உங்கள் வழக்கா? கோவில்களுக்கு வட மொழி தான் பிடிக்கும், புரியும் என்று ஏமாற்றி வழிப்பறி செய்யாமல் மொழிப்பறியால் வாழும் வேதியர் போல், நீங்களும் ஆங்கிலேயனுக்கு மேம்பட்ட ஆங்கிலனாய் போலி ஆங்கிலனாய் வேடமிட்டு முறைமன்றில் வீற்றிருப்பது முறை தானா?

அவனவன் அவல ஒப்பாரி அவன் தாய் மொழியில் தானே வரும்? அதற்கு மொழி பெயர்ப்பு என்றால், அந்த மொழி பெயர்ப்பு அவன் உணர்வைத் தொடுமா? உண்மையைத் தொடுமா? அயல் நாட்டு வேலைக்கும் படிப்புக்கும் செல்வார் அந்நாட்டு மொழியை முதலாவது கற்றுக் கொண்டுதானே ஆக வேண்டும். இங்கேயும் அயன் மொழியார் பதவிக்கு, இம்மாநில மொழியைக் கல்லாமல் - கல்லாமல் இருப்பாரை - விடுத்தால் வல்லாண்மைத்தனம் அல்லவா!

இந்தியும் ஆங்கிலமும் மட்டும் தாமா இந்நாட்டுமொழி? ஏனை மொழிகள் தீண்டா மொழிகளா? மொழிகளை ஒழித்துக் கட்டவா விடுதலை பெற்றோம்? நாட்டு விடுதலைக்கு முற்பட்டது மொழிவிடுதலை அல்லவா! மொழிக்கு விடுதலை இல்லாமல் சிறைக் கூட இருட்டறையில் தள்ளவா செங்குருதி கொட்டியும் செத்தும் ஈகம் செய்தனர்? முறைமன்றமே இதனை உணரவில்லை என்றால், இதனை முறையிடும் இடம் தான் எது? அரசியல் முரண்டரா ஒப்புவர்! போராட்டங்களின் வகை இரண்டு. இரண்டுமே அறப் போராட்டங்களே – காந்திய வழிப் போராட்டங்களே!

அகப்போராட்டம் – புறப் போராட்டம்.

முன்னது வழக்கறிஞரே முறைமன்றுள் இதனை முன்னெடுத்துப் போராட வேண்டும். அஃது அகப் போராட்டம்! பின்னது உணர்வாளர்கள் முறை மன்றத்திற்கு வெளியே இருந்து போராடும் போராட்டம்! உணர்வாளர் கிளர்ந்தால் - பாதிக்கப்படும் - பொதுமக்களும் கூட்டாமலே கூடி நிற்பர் என்பது கண்கூடு.

எம் மாநிலம் தமிழ் மாநிலம்; இம் மாநில வழக்கு இம்மாநில மொழியிலேயே நடை பெற வேண்டும். அரசியல் ஆவணத் தடை எதுவும் இல்லை. இந்தி வெறியர் ஆட்சியும் ஆங்கில வெறியர் பதவியும் தடைகளே அன்றிப் பிற தடை இல்லை.

தமிழ் மொழிக்குச் செவி சாய்க்கும் வரை முறைமன்றத்தில் வழக்காட மாட்டோம்! கேட்க முடியாதா? கேட்கக் கூடிய ஆளுக்கு இடம் விட்டு இடத்தைக் காலிசெய்! என்று துணிந்தால் பதவியர் ஆட்சியர் கண் திறந்தே ஆகும். செவி கேட்டே தீரும்!

வேண்டிக் கிடக்கும் - விண்ணப்பித்து அமையும் - தீர்மானம் நிறைவேற்றியும் நடக்கும் செயலில்லை இது.

வழக்கு மன்றம் எம் மொழியில் நடக்கும் வரை, முறைமன்றப் படியேறோம் என்னும் நோன்பு வேண்டும்!

நடுவர் மேல் வெறுப்பு இல்லை! அரசின் மேல் வெறுப்பு இல்லை! எங்கள் தாய் மொழியைக் காக்கும் உரிமை எங்களுக்கு உண்டு! பல்லாயிரம் ஆண்டாக நேருக்கு நேர் முறையிட வாய்த்த காட்சிக்குச் சிலப்பதிகார வழக்குரை காதை போதாதா? பெரிய புராணத் தடுத்தாட் கொண்ட புராணம் போதாதா?

முதல் முதல் தமிழ் இலக்கிய வரலாறு இருபாகங்களாக எழுதிய தமிழ்க் காசு தாகூர் சட்ட விரிவுரையாளர் என்னும் விருது பெற்றதும் பொற்கிழி பெற்றதும், சட்டச் சொல் அகராதி, ஆட்சிச் சொல் அகராதி என அகராதிகள் வந்ததும் கையாளவா, காட்சிச் சாலையில் வைக்கவா? போராட்டம் இல்லையேல் பொது நலம் - இனநலம் - மொழி நலம் எதுவும் வாய்க்காது என்பது தமிழக ஆட்சியரும், இந்திய ஆட்சிக் குறியரும் கண்டேனும் தமிழர் உணர்ந்து கடனாற்ற வேண்டாவா?

ஃஃஃ

# ஆங்கிலவழிக் கல்விக் கொடை வள்ளல்களே!
ஆங்கிலவழிக் கல்விக் கொடை வள்ளல்களே!

உங்கள் பேருள்ளம் – பெருஞ்செயல் – பெருந்தொண்டு எவருக்கு வரும்? என்ன காதல் உங்கள் கல்விக்காதல்?

ஆங்கிலேயன் ஆண்டநாளில் அவனும் செய்யாத அளவு ஆங்கிலமே கற்பிக்கும் – ஆங்கில வழி மட்டுமே கற்பிக்கும் – தாய் மொழியை வீட்டில் பேசவும் விடாமல் ஆக்கும் இந்தக் கல்விக் காதல், காளாண் முளைப்பது போல், ஈயல் பறப்பதுபோல் வெட்டியழிக்க இயலா வேலிக் கருவேல முள்போல் உண்டாகியது ஏன்? தமிழ்த் தாய் பெற்ற தனிப் பெரும் பேறு அல்லவா உங்கள் ஆங்கிலக் காதல்! இலண்டன் மாநகரிலே பிறந்து, தேம்சு ஆற்றங்கரையிலே வளர்ந்து ஆக்கசு போர்டு, கேம்பிரிட்சு நிலையங்களிலே கற்று உலக மெல்லாம் ஆண்ட ஆங்கிலக் காதல் உங்களுக்கு வந்தது கண்டு தமிழன்னை மெய்யாகவே பூரித்துப் போவாளா இல்லையா?

தாயின் ஈரலை (இதயத்தை) அறுத்துக் கொண்டு வந்தால் என்னைத் தொடலாம் என்றாள் ஒருத்திக்கு, அடிமைப்பட்டுக் கிடந்த ஒருவன் அவ்வாறே செய்து எடுத்துக் கொண்டு ஓடிவருங்கால் வீழ, அத்தாய் இதயம், 'மகனே அடிப்பட்டு விட்டதா, ஐயோ' என இரங்கியதாகப் புனைந்ததை மெய்யாக்கும் பிறவியரல்லரோ நீவிர்! ஆங்கில மாது மேல் அவ்வளவு காதலா? இல்லை, அவளைப் புனைகோலம் காட்டிப் பொருட்பறிப்புப் பரத்தனாகி விட்டீரா? நீங்கள் கல்வித் தொண்டு செய்யும் தாதாவா?

கடத்தல் கலப்படம் கையூட்டுகளால் ஆள்வோர்க்குக் கையாளாய் அவர்களுக்கு மேம்படச் சுருட்டும் கொள்ளையர் தலைவரா நீங்கள்? முன்னெல்லாம் என்னென்ன அறப்பணி செய்தீர்! நாட்டு விடுதலைக்காக என்னென்ன ஈகம் புரிந்தீர்! ஆங்கிலவழிப் பள்ளி தொடங்கு முன்பு நீங்கள் கோடி தேடிவைத்துக் குன்றின் மேல் விளக்காக நின்றவர்களா?

பெற்ற தாயை அவள் கட்டியிருந்து உங்களைப் பெற்றுவளர்த்து ஆளாக்கிய வீட்டை விட்டு ஓட்டிவிட்டுத் தெருவிலே நின்ற ஊருக்கு அப்பாலே இருந்த பிச்சைக் காரியைக் குடிவைத்துக் குளிப்பாட்டி பட்டுடுத்தும் பழிச் செயலைச் செய்யப் பாழும் பணக் கொள்ளை தானே அடிப்படை! இதுவும் ஒரு பிழைப்பா?

இருந்தது இந்த மண்; இருப்பதும் இந்த மண்; உண்டதும் உயர்ந்ததும் இந்த மண்! உயர்ந்து கொடிகட்டிப் பறக்க இருப்பதும் இந்த மண்! இந்த மண்ணின் மொழிமேல், இம்மண்ணின் மாந்தர்மேல், இந்த மண்ணைக் காக்கும் உரிமைமேல் துளியளவாவது பற்றிருந்தால் - நன்றி யிருந்தால் - சிந்திக்கும் பிறவியாக இருந்தால் பெற்ற தாயை 'அம்மா' என்று அழைக்கும் உரிமையைக் கூட வன்படியாகப் பறிக்கும் வஞ்ச நெஞ்சராய் உலா வருவீர்களா?

இந்திக்காரனைப் பாருங்கள் - வங்கத்தானைப் பாருங்கள் - அவ்வளவு வேண்டா ஆந்திரன் - கருநாடகத்தான் - மலையாளத்தான் ஆயோரையாவது பாருங்கள்!

உங்களைப்போல் பள்ளிக்குள் நுழையும் போதே தாய்க் கொலை புரியும் சண்டாளர்கள் உண்டா?

ஐந்து வரைக்கும் தாய்மொழியில் தரவிட மாட்டாத் தரக் கேடர், இந்த உலகிலேயே தமிழ்ப் பிறவியாம் உங்களைப் போல் எப்பிறவியாவது உண்டா?

நீங்கள் மருத்துவமா. பொறியியலா, அறிவியலா எவற்றையும் எந்த மொழியிலும் கற்பியுங்கள்! ஐந்து வரை தமிழில் மட்டுமே கற்பித்து அதற்கு மேல் எந்நிலையிலும் தமிழை ஒரு பாடமாகக் கொண்டு படியுங்கள் என்று வேண்டுவதில் என்ன கேடுவந்தது!

ஆங்கிலமோ இந்தியோ வேறு எம் மொழியோ எங்களுக்குப் பகை இல்லை. வெறுப்பதும் இல்லை. தமிழ்த் தாயின் கழுத்தை அறுத்து அவளைக் காவு வாங்கி வணங்குகிறீர்களே! இந்த வல்லாண்மைமேல் தான் எங்களுக்கு வெறுப்பு!

வஞ்சமான வகையில் தனித்தனி இனமொழிகளை அழித்துத் தானே கொடுங்கோலாட்சி செய்யக் கொடுக்கறுவாள் கொண்டுள்ள இந்தியத்தின் மேல், இந்தியப் பற்றின் மேல், இந்தியத் தேசியம் எனத் தான் தோன்றித் தனமாய் உளறுவர்கள் மேல் - மூளைச் சலவையர் மேல் தான் வெறுப்பு!

தமிழியத்தை அழிப்பதில் தமிழ்த்தாய் பெற்ற பிள்ளையாக இருந்தால் தலைப்படவே தலைப்படாது; ஏனெனில்,

"நலத்தின்கண் நாரின்மை தோன்றின் அவனைக்

குலத்தின்கண் ஐயப் படும்"

என்பது தமிழறம்!

ஃஃஃ

## பெற்றோர்களே! பெற்றோர்களே!

உங்கள் பிள்ளை தானே உங்களுக்குப் பெற்றோர் என்னும் பெருமை தந்தது. அக்குழந்தையின் மொழி தாய் தந்த மொழி ஆதலால் தானே தாய் மொழி எனப்பட்டது. அத் தாய் மொழியால் 'அம்மா' என அழைப்பது – உங்கள் குழந்தை உங்களை அழைப்பது உங்களுக்கு இழிவாகிப் போய் விட்டதா? அப்பா என்று அழைப்பது எட்டிக் காய் ஆகிவிட்டதா?

கோவை பேரூரில் தமிழ் வழிபாட்டு மொழி, தமிழ் பயிற்று மொழி மாநாடு. நாள் : 06. 09.2013. என் பங்களிப்பை முடித்துவிட்டு 07.09.13 இல் கோவையில் இருந்து கருவூர்க்குத் திரும்புகிறேன். கருவூரில் காலை 06.00 – 07.30 மணிக்கு ஒரு திருமணம் மறுநாள் நிகழ்த்த வேண்டும். யான் வரும் வண்டியின் என் இருக்கைக்கு வலப்பால் மூவர் இருக்கையில் இருவர் அமர்ந்தனர். அவர்கள் இருவர் மடியிலும் மாறி மாறி இருந்த மழலைக் குழந்தை 'அம்மா, அப்பா' என்று ஒரு நூறு முறையாவது கூறியிருக்கும். அவர்களை விட்டுப் பாட்டன் பாட்டியர் அழைத்துக் கொண்டு வருகின்றனர் போலும்!

ஒவ்வொரு முறையும் அந்தப் பாட்டன் அல்லது தாத்தா, அப்படிச் சொல்லாதே 'மம்மி' 'டாடி' சொல்! 'சல் சல்' காளைப் போலச் சொல் சொல் என்று கொண்டே வருகிறார்.

அட பாவியே! தமிழ்ப்பிறவி தானே நீ! உன்னைப் பெற்றதற்கு ஒரு கழுந்து உலக்கையைப் பெற்றிருக்கலாமே! அந்த மழலை மம்மி, டாடி என்றால் அப்படிச் சொல்லாதே 'அம்மா அப்பா' என்று சொல்ல வேண்டிய பிறவியாய் இருப்பதை விட்டு 'மம்மி டாடி' எனச் சொல்ல வைக்கும் பொல்லாத வெறி உன் அப்பனுக்கும் அம்மைக்கும் இருந்ததா? நீ தமிழ்ப் பிறப்பு என்று ஆயிரம் கோயிலில் சொன்னாலும் நான் நம்ப மாட்டேன்! மாடு கூட 'மா' எனக் கத்தும் இயற்கை மண்ணில் நீ மாடாகப் பிறந்திருந்தால் கூட 'மா' எனக் கத்தியிருப்பாயே! சே! சே!

உன்மக்கள் தமிழ்ப் பிறப்பெனத் தம்மை உணர்ந்து அம்மா அப்பா என்று தம் குழந்தையைச் சொல்ல வைத்ததைக் கெடுக்கும் கெடுகாலி நீ! உன்னைப்

போன்றவர்கள் உணர்வார்களா? செக்கு மாட்டுக்குக் கூட, செந்தமிழ் 'மா' கத்தத் தெரியும்? அப்படிக் கத்தவும் அறியா மாடு நீ! நொந்தேன்! நொந்தேன்! வீட்டில் இப்படித் தாய் மொழி சாகடிக்கப்பட்டால் வீதியிலும், ஊரிலும் நாட்டிலும் பிழைக்கவா செய்யும்?

பெற்றோர்களே, உங்களைப் பக்கத்து வீட்டார் மயக்கலாம். பக்கத்துப பள்ளிகள் தூண்டலாம். ஆங்கிலம் பரப்பி அள்ளிக் குவிக்கும் பிறவிகள், உலக உலா வரலாம். ஓடி ஓடித் தேடலாம் எனச் சொல்லலாம். அடுத்தவன் கட்டியுள்ள அடுக்கு மாடிகளைக் கண்டு உங்கள் பரம்பரை வீட்டை விடாதீர்கள்! தொல்காப்பியர் ஆங்கிலம் கற்றா, உலகம் போற்றும் இலக்கணம் செய்தார்? திருவள்ளுவர் ஆங்கிலம் கற்றா, ஒப்பிலாக் குறள்மாமணி நூல் செய்தார்? தாகூரோ காந்தியடிகளோ ஆங்கிலம் கற்றதாலா பெருமை எய்தினர்? கரிகாலன் ஆங்கிலம் கற்றா கல்லணை கட்டினான்?

வள்ளலார் ஆங்கிலக் கல்வியாலா ஏறாத நிலைக்கு ஏறி நின்றார்? கணித மேதை இராமாநுசன் ஆங்கிலத்தில் தேர்ச்சி அடைந்தவரா? கல்வியில் பெரியார் ஆகிய கம்பர், முதல் காப்பியம் பாடிய இளங்கோ, உலகமுதல் தூதர் ஔவையார், ஒப்பிலா யாப்பியல் காக்கை பாடினியம் செய்த காக்கை பாடினியார் ஆங்கிலம் கற்றதாலா வீறுகாட்டினர். உலக முதன் மொழி, உலக மொழிகளுக்கெல்லாம் தாயாம் மொழி, உலகவளம் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே வந்த மொழி நம் தாய் மொழியாம் தமிழ்மொழி!

தாய் தந்த தனித் தேட்டாகிய அதனை, தாய்த் தெய்வமாகிய தாயும், அக்கருவைத் தந்தவராம் தந்தையும் தாய் மொழிக் கல்வியை ஐந்து வகுப்பு வரையாவது தாராமல் விட்டொழித்தால், பால் வாய்ப் பருவத்திலேயே மம்மி டாடி என வழங்கும் மயக்கிலே ஈடுபட்டால் நீங்கள் தாய் தந்தையும் அல்லர்; உங்கள் மக்கள் சேயும் அல்லர்! தாய் மொழியை இழந்து போன இனம் செத்துக் கொண்டே நடக்கும் இனம்!

ஆங்கிலத்தால் வேலைகிட்டும் உலகெல்லாம் உலவலாம் என்று ஏமாற்றுகின்றனர்; சீனத்தில் சப்பானில் உருசியாவில் பிரெஞ்சில் ஆங்கிலத்தால் உலாவ முடியுமா? வடநாட்டில் இந்தி இல்லாமல் இயலுமா?

இந்தியால் இந்தியா முழுவதும் வேலை கைக்குள் வரும் என்பது ஏமாற்று இந்திக்காரர் தென்னகத்துக்கு வேலை தேடித் தேடி வருவானேன்? தமிழகத்து

வேலைகளில் வடநாட்டார் தானே. ஆந்திரர், கேரளர், கன்னடர் தாமே கொடி கட்டிப் பறக்கின்றனர்?

வட நாட்டுச் சேட்டுகள் வாரிக் கொள்ளையடிப்பது வடக்கிலா, தெற்கிலா?

வெளி நாட்டுக்குச் சென்று வேலை தேடமுடியா நிலை உருவாகிக் கொண்டு வருவதை அறிவீர்களா?

வேற்று நாட்டாரை வெருட்டுவது காணவில்லையா? தமிழில் கற்பி! தமிழகத்து வேலையெல்லாம் தமிழ்வழிக் கற்றார்க்கே கொடு என்று ஆட்சியரொடு போராடுவதை விட்டு வெள்ளத்தில் அடித்துப் போகும் சருகாக நீங்களும் இருக்கலாமா? தமிழகத்து மண் வடநாட்டுச் சுரண்டல்காரர்கள் வயமாகி ஊர் ஊராகத் தோன்றித் தமிழினத்தைச் சிறுபான்மை இனமாக்கும் வல்லாண்மை கண்ணில் படவில்லையா? எப்படியும் ஒழியட்டும் என்று விட்டுவிடுவது பெற்ற பிறவிக்குச் சீர்மை சேர்க்குமா? எண்ணிப் பாருங்கள்! எதிர்கால மக்களை வாழச் செய்யுங்கள்!

ஐஐஐ

## ஆசிரியர்களே! ஆசிரியர்களே!

உங்களை வணங்குகிறேன். ஏன்? 'குரு' என்பவர் நீங்கள். உள்ளொளி பெருக்குபவர் குருவர். உங்கள் உள்ளொளி பெருக்கினீர்களா? உங்கள் உள்ளொளியைப் பெருக்காமல் உங்களிடம் பயிலும் மாணவர்க்கு நீங்கள் உள்ளொளி பெருக்க முடியுமா? உங்கள் வாழ்வுதானே மாணவர்களின் எதிர்கால உயர்வுகளுக்கு மூலம். மூலமாம் வித்து சீராக இல்லையானால் முளையும் விளைவும் சீராகுமா? பழநாளில் ஆசிரியர்கள் பெயர்களைப் பாருங்கள்!

இளம்பாலாசிரியர்
பாலாசிரியர்
ஆசிரியர்
பேராசிரியர்
கணக்காயர்

என ஐந்து நிலையராய் இருந்தனர். அவர்கள் கற்பித்த நிலையால் ஐவகையர்.ஆனால் புலமையால் ஒருநிலையர்! எப்படி? அவர்கள் பாட்டு தொகைகளில் இடம் பெற்ற ஒத்த அறிவர். இற்றை நிலை அப்படி உண்டா? ஊராக்கமாக இருந்தவர் ஆசிரியர். கணக்காயர் இல்லாத ஊர் ஊரன்று என்று மதிப்பிட்டனர்.

மருத்துவம், கணியம், இசை, இலக்கியம், இலக்கணம், கூத்து, ஓவியம் எனப் பலதுறையும் வல்லாராக இருந்தனர்.

அறுவையர், குயவர், பொற்கொல்லர், கூலவாணிகர், பொன்வாணிகர், எயினர் எனப் பல்தொழிலும் வல்லாராகத் திகழ்ந்தவர் உண்டே! ஊர்மக்களுக்கே அல்லவோ ஆசிரிராக விளங்கினர். அரசர்க்கும், அமைச்சர்க்கும் அறிவுரைக்கும் அறவராகவும் திகழ்ந்தனரே. அந்நிலை அனைத்தும் இழந்ததை எண்ணினோமா?

அதிகாரிகளின் கால்கை பிடிப்பதும், ஆள்பவர்க்கு எடுபிடியாவதும், ஆசிரிய வீறு ஆகுமா?

ஆசிரியர்க்குச், சாதி, சமயம், அரசியல், கட்சி எனப் பிரிவினைகள் உண்டா? என்று இவற்றைக் கொண்டோமோ அன்றே நிலையில் இருந்து இறங்கியவர்கள் ஆகிவிடவில்லையா?

ஆசிரியர் வேலையா, தொழிலா, பணியா, தொண்டா, கடமையா - இவ்வெல்லாவற்றுக்கும் மேம்பட்ட இறைமைத் தொண்டர் அல்லரோ அவர். அதனால் தானே,

"எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான்" என்றனர். எத்தனை மேம்பாட்டாளரும் ஆசிரியர் வழி வந்தவர் தாமே! தம் தகவை இழந்தவர் ஆசிரியர் ஆவரா?

ஊரை நம்பி வாழ்ந்த காலம் போயிற்று ஆசிரியர்க்கு! அவர்கள் ஊரை நம்பவில்லை! ஊர் அவர்களை நம்பவில்லை! அரசனை நம்பியதும் போயது! இது கால், தனியார்க்குக் கொத்தடிமையாகி விட்டது ஆசிரியப் பணி!

தொண்டு நிலை போய், தொழில் நிலை ஆகியது! அந்நிலையும் போய், அடிமை நிலையும் ஆகிவிட்டது. தூக்கத் தூக்கும் ஆடி நிழல் நிலையில் இருப்பவர் மாணவர்க்காக வாழ்வாரா? கல்வி ஆண்டகைக்காக வாழ்வாரா?

இந்நிலையில் வீட்டில் தனிக்கல்வி வேறு!

மாணவர் வளர்ச்சிக்குத் தேர்ச்சி தானே அளவு கோலாக உள்ளது! அவன் பண்பா, சால்பா, பொது நலநோக்கா, எதிர்காலக் கடமையா எந்த அளவு கோலாவது உண்டா?

மற்றை ஆசிரியர்கள் இருக்கட்டும்!
தமிழாசிரியர் நிலை என்ன?
முறையாகத் தமிழ் கற்றதுண்டா?
அகராதி அவர் வீட்டில் உண்டா?
நூலகம் சிறிய அளவிலேனும் உண்டா?

பாடத்திற்குரியதை வினா விடையாகப் படித்துத் தேர்வு வெற்றி பெற்றபின் வேலை பெற்றுப் படிப்பது உண்டா?

தம் கூட்டங்களில் தம் ஆய்வை முன்வைத்து மேலாய்வு செய்வதுண்டா? தமிழ் என்பதே அற்றுப் போகச் செய்யும் அரசியலில் தாமாவது தமிழ் உணர்வோடு கடனாற்றுவார் எத்தனைபேர்?

தமிழ் வழிபாட்டை முன்னெடுக்க, குடும்பச்சடங்கைத் தமிழ் முறையில் நடத்த, தமிழர் பண்பாட்டை மீட்டெடுக்க எத்தனை பேர் சூள் கொண்டீர்! தமிழைக் கெடுப்பார் போக்கையாவது தடுக்க முனைந்தது உண்டா? தம் குடும்பம் சார்ந்தோராவது தமிழ் நெறியராய் வாழ வழிகாட்டிய துண்டா? நம்மை வாழ வைக்கும் தமிழை வாழ வைக்க எண்ணவில்லை எனில் நாம் வாழப் பிறந்தவர் தாமா?

அணு உலையால் நாடே கெடும் எனப் போராடுவதைக் காண்கிறோமே! அணு உலைகளை நாடு நாடாக மூடிவருவதை அறிகிறோமே அந்தத் துடிப்புப் போராட்டத்தை! ஐம்பது ஆண்டுகளில் தமிழ் வழக்கிழந்த மொழியாகிவிடும்; இந்திய மொழிகளில் இந்தியும் வங்காளமுமே வாழும் மொழிகளாக இருக்கும் என உலக அறிக்கை கண்ட பின்னரேனும், அணுவுலைக் கேட்டினும் கேடு ஆங்கில வழிக் கேடு என ஒட்டு மொத்த ஆசிரியர்களும் – தமிழ்மொழி, தமிழ்ப் பிறவியர் தமக்கெல்லாம் பொதுச் சொத்துத்தானே – போராட்டம் நடத்திய துண்டா?

ஆசிரியர்களே விழிப்புறாத நாட்டில் வேறு எவர்தாம் விழிப்புறுவார்? வினாவத்தான் வேண்டியுள்ளது! விடிவு அல்லவா வேண்டுவது!

ஃஃஃ

## மாணவர்களே! மாணவர்களே!

நீங்களே எதிர்காலச் செல்வங்கள்!

நீங்களே எதிர்கால நாட்டுவளம்!

எதிர்கால எவ்வாழ்வும் உங்கள் கையில் தானே உள்ளது?

உங்கள் எண்ணப் பதிவுகளெல்லாம் கல்வியிலேயே உள்ளனவா?

கட்சிப்பக்கமும் காட்சிப் பக்கமும் காதல் பக்கமும் மயக்கும் மதுப் பக்கமும் உள்ளனவா?

அடித்தளம் சீராக இல்லாமல் அடுக்குமாடி எழுப்பினால், எழுப்பிக் கொண்டிருப்பார் மேலேயே இடிந்து காவு வாங்கி விடாதா? போதையினும் போதையாய் எப்பொழுதும் சொரி காதராய்த் திரிவது கல்விப் பருவத்திலேயே!

“கருவுயிர்த்த இடத்திலேயே குணாங்கிய பிள்ளை கடைத் தேறாது” என்பது போல் அல்லவா உங்களுள் பெரும் பாலோர் நிலை உள்ளது. கட்சியர்க்கும் காட்சியர்க்கும் கொடிபிடிக்கும் காலமா உங்கள் கல்விக் காலம்!

உயர்பள்ளிக் கல்விக் காலத்திலேயே ஊர் சுற்றத் தொடங்கி விட்டால் பின்னைக் கல்வி உருப்படுமா?

உங்கள் தாய் தந்தையர் எப்பாடுபட்டுக் கல்விக்கு விடுத்துள்ளனர்! வில்லாதனவும் விற்று விடுதிக் கட்டணம் கட்டுகின்றனரே! விடுதி வாழ்வு விளங்கும் கல்வி, வாழ்வா, எவர் கையையோ பற்றிக் கொண்டு சுற்றுலா மையங்களில் வட்டமிடும் வாழ்வா?

நட்பு என்பது என்ன?

நடுகல்போல ஊன்றி நிற்கும் நிலையல்லவா! நான்கு நண்பர்கள் கூடினால் நாற்கால் மண்டபம் ஆகிவிட வேண்டாமா? இடித்துத் திருத்தும் நட்பே நட்பு!

சேர்ந்து குடிப்பதும் – சேர்ந்து கூத்தடிப்பதும் – சேர்ந்து சூதாடுவதும் நட்பாகுமா?

அந்தக் கெடுகாலி நட்பு எவ்வளவு காலத்திற்கு நிற்கும்!

'புணர்ச்சி பழகுதல் வேண்டா' ஆணுக்கு ஆணும், பெண்ணுக்குப் பெண்ணும் கூடத் தொட்டுப் பழகினால் கெட்டுத் தொலைவர் என்றாரே, பொய்யா மொழியார்!

தொடக்க நாள் முதல் அன்றன்று கற்க வேண்டியதைக் கற்றாலே முடியாதது அல்லவா கல்வி! அதனைக் கால மெல்லாம் ஊர் சுற்றித் திரிந்து விட்டுத் தேர்வன்று படித்துத் தேர்வறைக்குச் சென்றால் தேர்ச்சி கிட்டுமா?

நீங்கள் பயிலும் இடத்திலேயே கல்வியே குறியாக இருப்பவர் இலரா? அவரைப் பின்பற்ற என்ன தடை? கல்லூரியில் இடம் கிடைக்க என்ன பாடு? விடுதியில் இடம் கிடைக்க என்ன பாடு? கட்டணம் கட்ட என்ன பாடு?

இவ்வளவும் மறந்து விட்டுப் பூங்காக்களில் சீட்டியடித்துக் கொண்டு திரிவதா, திரைப்பட நடிக நடிகையரைக் குலதெய்வமாகக் கொண்டாடித் திரிவதா கல்வியின் இலக்கணம்?

பெரும்பாலான குறும்படம் - பெரும்படம் ஆயவற்றில் வரும் காட்சி, காலிகளாக அரட்டை அடிக்கும் மாணவ மாணவியர் கூத்துத் தானே!

இப்படிக் கற்கும் மாணவரை இழிமைப்படுத்தாதே என என்றாவது கண்டனம் - ஊர்வலம் - மறியல் செய்த துண்டா?

ஒவ்வொரு நாட்டு விடுதலைப் போரும் - அரசியலார் அடாவடியை ஒடுக்கும் முயற்சியும் எவர் கொண்டார்?

மாணவர்களின் தம் நலம் கருதாத் தீரமிக்க ஈகம் அல்லவோ, பல நாடுகளைத் தலைநிமிர வைத்துள்ளது!

ஒவ்வொரு கட்சியும் மாணவர் அணியை உருவாக்குவது ஏன்?

தங்கள் தங்கள் கரவு வாழ்வும் காக்க வல்ல காவல் அரணம் மாணவப் படையே என்ற தெளிவால் தானே செய்கின்றனர்?

அதனை எண்ணிப்பார்க்கும் - எதிர்க்குரல் கொடுக்கும் - மாணவர் படையும் உருவாகிக் கொண்டிருக்கத்தானே, நாட்டில் விழிப்பு ஏற்பட்டுள்ள சான்றாக விளங்குகின்றது?

"இப்படை தோற்றால் எப்படை வெல்லும்?"

என்னும் வினா எழுப்ப முன்னிற்பது மாணவப் படை தானே!

படிப்பைப் படித்துப் பட்டமும் பெற்று பதவியும் உற்று நீங்கள் ஆட்சிக் கட்டில் ஏறினால் அன்றி இந்நாடு மொழி இனம் உய்யாது என்னும் எண்ணம் இக்கால் முதியர் சிலர்க்கேனும் விடிவெள்ளியாகத் தோன்றுகின்றதே! அதனை வெற்றியாக்கி வீறுபெற்று ஓங்க நீங்கள் செய்தால் அன்றித் தமிழக நெல்லிக் காய் மூட்டைக் கட்சிகள் என்றாவது செய்யுமெனஎதிர்பார்க்க முடியுமா?

உங்களுக்கு ஓர் எச்சரிக்கை: உங்களைப் பயன்படுத்திக் கொண்டு ஆட்சிக் கட்டில் ஏறி ஆகாதன வெல்லாம் செய்யும் தம் நலத்தார் கைப்பாவையாக நீங்கள் ஆகிவிடாமல் இருக்கும் தெளிவும் திடமும் வேண்டும்! ஏனெனில் பாடுபட்ட பயன் பாமுக்கு இறைத்ததாய் – படுகுழிக்குள் தள்ளுவதாய் ஆகிவிடக் கூடாது அல்லவா!

**வாழிய நலனே! வாழிய நிலனே!**

ஃஃஃ



சாதி, மாந்தர்க்கு உண்டா?

மீனின் சாதி, பறவைச்சாதி, விலங்கின் சாதி என மற்றை உயிரிப் பிரிவுகளுக்குத்தானே இருந்தன!

மாந்தருக்குள் குடி உண்டு: குலம் உண்டு: இனம் உண்டு.

ஒன்றன் பிரிவு ஒன்று

ஒரு குடும்பத்தார் ஒருகுடி; பலகுடியர் ஒருகுலம்; பலகுலத்தார் ஓர் இனம்.

.... .... ....

இலவசம் வேண்டா! அரசு கல்வி தருவது கட்டாயம்; மருத்துவம் தருவதும் கட்டாயம்; வேலை தருவதோ மிகக் கட்டாயம்; மற்றை இலவசம் வேண்டா என்னும் மான உணர்வு உண்டாகி, மற்றை இலவசங்களைத் தூக்கி எறியும் துணிவு வந்தாக வேண்டும். அவ்வாறு வாரா திருக்கச் செய்வனவே தொலைக்காட்சி இலவசமும் குடி கொடுப்பும் என அறிவாளர் தெளிவிக்கும் மீட்பராக விளங்க வேண்டும்.

காலக் கட்டாயம் இது.

– இரா. இளங்குமரனார்

The Printing House, Try-23. Ph : 2420121